**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்**

**முன்னிலை :** முனைவர்.சி.உஷாராணி,

**ந.க.எண்.009823 / எப்1/ 2020** **நாள் : 21.03.2020**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மார்ச் **2020,** மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகள் – தேர்வு மையங்களில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் – அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை:** பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்: 011328/எம்/இ**1/2020**, நாள்: 18.03.2020

*****

**ஆணை :**

மார்ச் **2020,** மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையங்களில், தேர்வர்களின் நலன் கருதி கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் / தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கும் பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. பார்வையில் காணும் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் செயல்முறைகளில் அறிவுறுத்தியவாறு தேர்வர்களின் பாதுகாப்பு நலன் கருதி, ஒவ்வொரு நாளும் தேர்வு துவங்குவதற்கு முன்பு, தேர்வு மையங்களில் உள்ள தேர்வறைகள் மற்றும் தேர்வுப் பணி நடைபெறும் அறைகள் ஆகியவற்றில் உள்ள மேசை, நாற்காலி, இருக்கைகள் ஆகியவற்றில் கிருமி நாசினி தெளிக்க வேண்டும். அதன் பின், இருக்கையில் எழுதப்பட்டிருக்கும் தேர்வெண்கள் ஏதேனும் அழிந்திருந்தால் தேர்வெண்களை மீண்டும் எழுதி தேர்வர்கள் சரியான இருக்கையில் அமர்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2. தேர்வெழுதுவதற்கு முன்னதாக, தேர்வர்கள் கைகளை சோப்பு மற்றும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து கொள்ள பள்ளிக்கல்விதுறை இயக்குநர் அறிவுறுத்தியவாறு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. தேர்வு முடிவுற்ற பின்பும் தேர்வர்கள் கைகளை சோப்பு மற்றும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. தேர்வர்கள் தங்களுடன் Hand Sanitizers எடுத்து வந்திருந்தால், அதனை தேர்வறைக்குள் எடுத்துவர அனுமதிக்கலாம்.
5. சளி, இருமல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள் எவரேனும் முகக்கவசம் அணிந்து வந்தால், முகக்கவசத்துடன் தேர்வெழுத அனுமதிக்கலாம்.
6. தேர்வறையில் தேர்வர்களை ஒரு மீட்டர் இடைவெளியில் அமர வைக்கவேண்டும்.

ஒம்/–

இயக்குநர்

பெறுநர்:

அனைத்து மேல்நிலை தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / பள்ளித் தலைமையாசிரியர்கள் – முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக

நகல்:

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை –9
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பள்ளிக் கல்வி ஆணையர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
   – உரிய நடவடிக்கைக்காக நகல் அனுப்பலாகிறது.
4. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலகர்கள்.
   – உரிய நடவடிக்கைக்காக நகல் அனுப்பலாகிறது.
5. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காக நகல் அனுப்பலாகிறது